# அகல் விளக்கு

கைதடி உறவுகளின் காலாண்டு இதழ்

ஒளி:1,திரி:2 சித்திரை- வைகாசி- ஆனி 2008

# கிராமிய மேம்பாடு: உறவுகள் பங்களிப்பு

## தலைவர் சி.தங்கத்துரை

தாயக உறவுகளுக்கும் புலம்பெயர் நாடுகளில் வதியும் எமது உறவுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இடை வெளியை நிரப்புகின்ற பணியிலும் தாயகத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவுகின்ற பணியிலும் ஐரோப்பிய மண்ணில் தோற்றுவிக்கப்பட்டுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்ற அனைத்து உறவுகளின் பணியையும் உணர்வினை யும் பாராட்டி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கி ன்றேன். இவ்வாறு பிரான்ஸ் கைதடி அபிவிருத்திக் கழகத்தின் மூன்றாவது வருட ஒன்றுகூடலையொட்டி அதன் தலைவர் சி.தங்கத்துரை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

புலம்பெயர் நாடுகளிலுள்ள எமது உறவுகள் வழங்கிய உதவிகள் கைதடி மண்ணில் கல்வி மேம்பாட்டுத் திட்டப் பணிக்காக செலவிடப்படுகின்றன. இந்த உதவிகள் அங்குள்ள மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் சற்று ஆறுதலாக இருப்பதனை அங்கிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

2005 ஆம் ஆண்டு பிரான்ஸில் வதியும் கைதடி உறவுகளாகிய நாம் ஒன்று கூடியபோது எடுத்த முடிவும் கைதடி மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றியதாகவே இருந்தது- பிரான்ஸை தொடர்ந்து சுவிஸ், லண்டன், கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான உதவிகள் மூலம் தாயகத்திலுள்ள உறவுகளின் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது தான் இருந்தாலும் இங்கிருந்து கிடைக்கின்ற உதவிகள் அங்குள்ள உறவுக ளுக்கு நம்பிக்கையளிப்பதுடன் அவர்களுக்கு வாழ்வுக்கு தெம்பூட்டுவதாகவும் அமையும் என்பது உண்மையே.

கைதடி உறவுகளின் மேம்பாடு தொடர்பாகவே புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள உறவுகள் அனைவரும் சிந்தித்துச் செயற்பட்டு வருகின்றார்கள். இந்த மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக ஒரு பொதுவான கொள்கையை கடைப்பிடித்து அது தொடர்பான அடிப்படைத் திட்டங்களை தயாரித்து செயற்படுத்தல் அவசியமாகின்றது .(2ம் பக்கம் பார்க்க)

## உள்ளே................


*குயிலின் கைவண்ணம் - ஓவியம்!
*கண்ணதாசன் பாடல்கள் - பட்டறிவின் தொகுப்பு
*உலகின் முதல் மொழி தமிழ்
*குணாவின் குறிப்புகள்
*கலைத்துறையில் குணம்
*கனடா கடிதம்
*கல்வித் திட்ட மாணவர் விபரம்
*சிரி...சிரி...


## நமது குரல்

### உத்வேகத்துடன் 'அகல்விளக்கு'

கைதடி மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது உறவுகள் 'அகல்விளக்கு' சஞ்சிகைக்கு தங்கள் ஆதரவினையும் வரவேற்பினையும் வழங்கி எமக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தந்துள்ளனர்.

திக்கொன்றும் திசையொன்றுமாக பிரிந்திருக்கும் நம் உறவுகளுக்கிடையில் உறவுப்பாலம் அமைக்கும் வகையில் அகல்விளக்கு பணி அமைந்துள்ளதாகவும் இன்றைய நிலையில் இம் முயற்சி அவசரமும் அவசியமானதும் என்றும் பல உறவுகள் தங்கள் பாராட்டுக்களை தெரிவித்திருக்கின்றார்கள்.

எங்கள் உறவுகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு செய்தி மடலாக அறிமுகமான அகல் விளக்கு இரண்டாவது இதழ் மூலம் காலாண்டு கலை இலக்கிய இதழாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த முயற்சி வெற்றி பெற தொடர்ந்தும் தங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை.

எங்களுடைய உறவுகளுக்காக வெளியிடப்படும் இந்த இதழை கட்டணமாக்குவது எமது நோக்கமல்ல. இலாப நோக்கத்துடன் செயற்படுவதற்கு வர்த்தக நோக்கமும் அல்ல. இருந்தாலும் இந்த வெளியீட்டின் போது ஏற்படும் செலவினங்களை ஈடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் தங்களால் இயன்ற உதவியை வழங்கி தொடர்ந்து வரும் இதழ்கள் சிறப்புடன் வெளிவர உதவுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இன்றைய சூழலில் புலம்பெயர்ந்து வாழும் எமது இயந்திரமயமான வாழ்வில் சஞ்சிகை வெளியிடுவது என்பது மிகவும் கடினமான வேலை தான். இருந்தாலும் எம்மவர்களுக்கிடையில் தொடர்புப் பாலம் ஒன்று அவசியமாக கருதப்படுவதாலே அகல் விளக்கு' வெளியிடப்படுகின்றது.

ஐரோப்பா மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகள், கனடா, அமெரிக்காஆகிய இடங்களில் வதியும் எம்மவர்களும் தாயகத்தில் வதியும் உறவுகளும் கைகோர்த்துக் கொள்ளும் வகையில் அகல் விளக்கின் பணிகள் தொடரும்.இதற்காக மேற்குறிப்பிட்ட நாடுகளில் வதியும் உறவுகள் அனைவரும் எம்மோடு தமது தொடர்புகளை பலப்படுத்துவீர்களென நம்புகின்றோம

**அகல் விளக்கு**
வெளியீடு:
கைதடி அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ்

பிரதம ஆசிரியர்
என்.கே.ரி.

ஆசிரியர் குழு

மா.ஜெயந்தன்
சி.கதிர்செல்வன்
இ.துஷிகரன்

சுவிஸ்
இ.சூரி

ஜெர்மனி
செ.கிருபா

இத்தாலி
வை.சண்முகநாதன்

லண்டன்
என்.கனோத்

ஹொலண்ட்
சி.ராஜன்

டென்மார்க்
பூ.தர்மலிங்கம்

நோர்வே
கி.நமசிவாயம்
செல்வி.கோ. மதனா

கனடா
நா.கந்தையா
திருமதி கேதா

அமெரிக்கா
கந்த.ராஜலிங்கம்

கைதடி
சி.வே..சின்னத்தம்பி
சி.நிசாகரன்

தொடர்புகளுக்கு
K.THURAISINGAM
211 Av.Maurice Berteaux,
78500 SARTROUVILLE
FRANCE
தொலைபேசி
06 50 65 05 11
Senthalann@ hotmail.fr

# வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

கைதடி ஒன்றியத்தின் தேவையினையும் அதன் செயற்பாட்டு விழுமியங்களையும் அகல்விளக்கில் பார்த்ததில் அகமகிழ்ச்சி. இதனை முழுமையாக பார்த்தவுடன் உண்மையிலேயே எமக்குள் பல நல்ல உணர்வுகள் அதனையொட்டிய சிந்தனைகள். இப்படியான ஒரு இதழ் எம்மவரால் செயற்படுத்தப்படுவதில் நாம் பெருமையடைகின்றோம்.
இது மட்டுமல்லாது வற்றிப் போன பலரது சிந்தனைகளிற்கு உயிரூட்டியுள்ளது. எனவே இதன் மூலம் பலர் பயனடைய அகல் விளக்கு சுடர் விட்டு பிரகாசிக்கட்டும்.
காய்த்த மரத்திற்கு கல்லெறி விழுவது அனைவரும் அறிந்ததொன்று. அவ்வாறு அகல் விளக்கிற்கு ஓர் சந்தர்ப்பம் நேர்ந்தால் கூட இன்று போல் என்றும் சளைக்காது சலிக்காது உங்கள் பணி தொடர எமது வாழ்த்துக்களும் நல்லாசிகளும்...

**உறவுகள் மலர வாழ்த்தும்**
**சின்னத்தம்பி வேல்கிருஷ்ணா**

*கிராமிய மேம்பாடு.... (1ம் பக்கத் தொடர்ச்சி)*

இந்தச் சிந்தனையின் அடிப்படையில் தான் கைதடி - ஐரோப்பிய இணையம் தொடர்பான கருத்துக்கள் எமது உறவுகளுக்கிடையில் பல தடவைகள் தனியாகவும் கூட்டாகவும் நாம் ஆராய்ந்தபோதும் ஒவ்வொரு நாட்டு உறவுகளையும் ஒன்றாக சந்திப்பது சிரமமாக இருக்கின்றது. விரைவில் இது தொடர்பான செயற்பாடுகள் வெற்றியளிக்கும் என்று நம்புகின்றேன்.
நாங்கள் நடந்து வந்த பாதைகள் கல்லும் முள்ளும் நிறைந்த மிக கொடூரமான பாதை தான். அந்தப் பாதையில் எமது எதிர்கால சந்ததிகளையும் சிக்கவைக்கமால் அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டியதும் அவர்களை ஊக்குவிக்கவேண்டியதும் நமது கடமையாகும். கிராமத்தில் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்ற பணியில் சனசமூக நிலையங்களின் பங்கு முக்கியமாக இருக்கின்றது. அந்த நிலையங்கள் ஊடாக முதிர்ச்சியடைந்த பலர் புலம்பெயர் நாடுகளிலே வாழ்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எமது பணிகளில் பங்கு பற்றவேண்டும். குடும்ப நிலை மற்றும் பிற இன்னோரன்ன காரணங்களால் பின்னிற்பவர்களையும் அணிதிரட்டி இந்த பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
நாம் எவ்வளவு தான் கற்றவர்களாக இருந்தாலும் அனுபவம் ஊடாக கிடைக்கின்ற கல்வி தான் எமது பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவுகின்றது என்பதனை நாம் அனைவரும் உணரவேண்டும். அதனால் அனுபவங்களின் அரவணைப்புடன் எமது பணிகளை முன்னெடுப்போம்.
கைதடி மேம்பாடு என்று கூறுகின்றபோது பல வடிவங்களாக இந்த மேம்பாடு அமைகின்றது. கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, பொருளாதாரம் என பல துறைகளிலும் மேம்பாடு அவசியமாகின்றது. இவை எல்லாவற்றையும் உடனடியாக எம்மால் மேம்படுத்த முடியாது. அதனால் தான் ஆரம்பத்தில் கல்வி மேம்பாடு பற்றிய வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
தற்பொழுது கல்வி மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள எமது நடவடிக்கைகள் வெற்றியளிக்கும் நிலையில் கட்டடம் கட்டமாக ஏனைய திட்டங்களிலும் மேம்பாடு ஏற்படும் என்பதனை அனுபவத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.
கடந்த மூன்று வருடங்களில் நாம் எதிர்பாராத வகையில் புலம்பெயர்ந்த எமது உறவுகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதற்காக நான் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள எமது உறவுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.
தாயக உறவுகளுக்கு உதவி செய்வதுடன் மாத்திரம் நின்றுவிடாது இந்த உதவிகள் உரியவர்களுக்கு கிடைத்திருக்கின்றதா,? அப்படியானால் அவர்கள் அதனை நல்லமுறையில் பயன்படுத்துகின்றார்களா? என்பதனையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இதனை நான் ஏன் சொல்லுகின்றேன் என்றால் நாங்கள் அனுப்புகின்ற பணம் சும்மா வந்த பணம் தானே என்று நினைத்து சும்மாவே தேவையற்ற செலவுகளுக்கு பயன்படுத்தப்படலாம் என்பதாலே தான் இந்தச் செய்தியை விடுக்கின்றேன்.
தாயக உறவுகளும் தங்களுக்கு கிடைக்கின்ற உதவிகளை தமது தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தப் பழகிக்கொள்ளவேண்டும். வெளிநாட்டிலிருந்து உதவிகள் கிடைப்பதால் தொடர்ந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது . கிடைக்கின்ற உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் எதிர்கால வாழ்வை வளம்படுத்தவேண்டும்.
பல்லாயிரக்கணக்கான மைல்களைக் கடந்து நாம் வாழ்ந்தாலும் எங்கள் நினைவு முழுவதும் கிராமத்தைப் பற்றியதாகவே இருக்கின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# ஊருக்கு வாழ்வதில் தோல்வியில்லை!

## அடுத்த சந்ததி சிகரங்களைத் தொடவேண்டும்

கொடுமையான யுத்தம் மற்றும் கடுமையான பொருளாதார தடை உட்பட பல இன்னோரன்ன காரணங்களினால் தாயகத்திலுள்ள எமது உறவுகள் படும் துன்பமும் துயரமும் தொடர்கதையாக நீண்டு கொண்டே போகின்றது. என்றுமில்லாதவாறு மிக மோசமான நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் எமது உறவுகளை அதிலிருந்து முழுதாக விடுவிக்கமுடியாது விட்டாலும் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற நாம் எம்மால் இயன்றளவு உதவவேணடும். நாம் வழங்கக்கூடிய உதவிகள் அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கைதடி மேம்பாடு என்ற எண்ணத்தின் அடிப்படையில் புலம்பெயர்ந்த நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள எமது நிறுவணங்கள் தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கல்வி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம் என பலவற்றை இந்த மேம்பாடு என்ற சொல் சுட்டி நிற்கின்றது. இவற்றுக்கு அப்பால் தனிமனித மேம்பாடு பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.சிறுவர், இளைஞர், பெண்கள்,மூத்தோர் என இந்த மேம்பாடு விரிந்து செல்லும்.இவை எல்லாவற்றையும் தனித்தனியாக செயற்படுத்துவதற்கு நீண்ட காலத்திட்டங்கள் தேவை. இன்றைய சூழலில் இவ்வாறு சிந்திப்பதும் செயற்படுவதும் உடனடியாக சாத்தியமற்றதாக இருந்தாலும் இது குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

தற்போதைய சூழலில் எங்களால் இயன்றதை எமது இயல்புக்கு உட்பட்ட பணிகளைத் தான் உடனடியாக செய்யமுடியும் என்ற எண்ணத்தின் வழியில் தான் முதலாவதாக தாயகத்திலுள்ள எங்கள் உறவுகளின் பிள்ளைகளின் கல்விக்கு உதவ வேண்டும் என்பதனை தீர்மானித்து எமது அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எமது உறவுகள் மற்றும் தாயகத்திலுள்ள உறவுகள் பலர் சிறிய வயதிலே பாடசாலைக் கல்வியை தொடர வறுமை அவர்களுக்கு தடையாக இருந்ததை நாம் அறிவோம். அதனால் தான் நாம் கல்வியிலே ஏற்றம் பெற்று உயர்நிலையை அடையமுடியவில்லை.இது எமது சமுதாயத்துக்கு கிடைத்த சாபக்கேடு - இதனை இல்லாமல் செய்வது எமது மனங்களிலே தான் தங்கியிருக்கின்றது. நாங்கள் எட்டாத சிகரங்களை எங்கள் பிள்ளைகள் தொடவேண்டும் என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்துகக்ள் இருக்கமாட்டாது.

இந்தப் பணிக்காக 2005 இல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நாட்டப்பட்ட அடிக்கல் ஐரோப்பாவில் இன்று அத்திவாரமாக எழுந்து நிற்கின்றது. இன்னும் சில வருடங்களில் அது கட்டிடமாக உயர்ந்து விடும் என்பது எமது நம்பிக்கை.

நாங்கள் நிறுவன ரீதியாக இயக்கம் பெற்றபொழுது எதையும் கற்றுக் கொண்டோ, அறிந்து கொண்டோ செயற்படவில்லை. கிராமத்தின் மீது இருந்த பற்றுதல் முற்று முழுதாக எமது பணிகளுக்கு வழிகாட்டியாக இருந்தன.

சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயரிய தத்துவங்களின் அடிப்படையில் பிரான்ஸ் நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நாம் கூடி வாழ்கின்ற பொழுது அதாவது கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றபொழுது எங்களுக்கு முரண்பாடுகள் பிரச்னைகள் எழுவது இயல்பானதே.இதனைத் தான் சினிமா, மற்றும் சின்னத்திரைகளும் கலை இலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு பிரச்னைகள், முரண்பாடுகள் ஏற்பட்டாலும் தாயகம் என்ற உணர்வுக்கு முன்னாலும் இவையெல்லாம் தூசுக்குச் சமனாகும்.

கிராமத்திலுள்ள உறவுகள் எமக்கு என்ன செய்தார்கள் என்று கேட்காமல் அந்த மக்களுக்கு நாம் என்ன செய்தோம் என்று சிந்திக்கவேண்டும். அவ்வாறான மனப்பக்குவம் வரும்பொழுது தான் தொண்டு செய்வது இயல்பாக வந்து சேரும். சேவை மனப்பான்மை, தொண்டுள்ளம் இருந்தால் தான் மக்களுக்கு உதவமுடியும்.மேலும் இதற்கான ஆர்வமும் இருந்தால் எந்த நேரத்திலும் எம்மால் செயற்படமுடியும். ஆற்றல் இருந்தாலும் ஆர்வமில்லாமல் நாம் ஒரு பொறுப்பினை ஏற்கின்றபொழுது பொறுப்பாக அதனை செய்யமுடியாது போய் விடும். எனவே பொறுப்புக்களை ஏற்பதற்கு முன்னர் அதனை என்னால் செய்யமுடியமா? அதற்கான நேரமிருக்கின்றதா? என்பதனை ஆராய்ந்து அதற்கு முடிவு கட்டிய பின்னரே பொறுப்புக்களை சுமக்கவேண்டும்.

புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை இயந்திரமயமான வாழ்க்கையில் சிக்கிப் போயிருக்கின்றோம். அதிகாலையில் மணிக்கூட்டு அலாரம் அடிக்கின்றபோது ஏற்படுகின்ற எரிச்சலும் புகைச்சலும் மாத இறுதியில் வாடகை, நீர், மின்சாரம், வங்கிக்கடன் என பலதும் சேர்த்து ஒரே நேரத்தில் வரும் கட்டணங்களும் இதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நள்ளிரவு நேரத்தில் ஊரிலிருந்து வரும் தொலைபேசி அழைப்பும் என சிக்கெடுக்கமுடியாத இடியப்ப சிக்கலுக்குள் மாட்டித் தவிக்கும் எவரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பாதவர்களாக இருப்பது இயல்பானதே.

ஆனால் இவர்கள் ஒன்றை மட்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனி ஒருவருக்கு மட்டும் இந்தப் பிரச்னைகள் இல்லை. இது புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற ஈழத்தமிழர்கள் அனைவரதும் ஒட்டுமொத்த பிரச்னை இந்த நிலையிலுள்ளவர்கள் கிராமத்து உறவுகளுடன் உறவாடுகின்ற பொழுது சற்று ஆறுதல் அடையமுடியும் என்பதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

பிரச்னை யாருக்குத் தான் இல்லை. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பிரச்னை தான். பிரச்னை இல்லை என்றால் வாழ்க்கையில் சுவாரஸ்யம் இல்லை. பிரச்னையை கண்டு துவண்டு போனால் பின்னர் வாழ்க்கையே இல்லை. எனவே பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போடபழகிக் கொள்ளவேண்டும்.

ஊரில் தான் சனசமூக நிலையங்கள் போன்ற சமூக நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நாடுகளிலும் இது தேவையா? சிலர் இவ்வாறான அமைப்புக்களை உருவாக்கி தங்கள் தலைமைக்கான இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதற்கும் தங்கள் வயிற்றினை கழுவிக்கொள்வதற்குமே இயங்கிக் கொண்டிரு க்கின் றார்கள் என்ற கருத்துக் களும் பொது விடயங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மறைந்திருந்து நச் சுவிதைகளை விதைப்பவர்களும் எம்மிடையே இருக்கின்றார்கள்.

இந்த நிலை மாற்றப்படவேண்டும். 'சுட்டிக்காட்டும் விரல்கள் எல்லாம் சுத்தமான கைகளும் அல்ல சுட்டிக்காட்டப்படும் நபர்கள் எல்லோரும் குற்றவாளிகளுமல்ல' ஆரோக்கியமான கருத்துக்கள் முன் வைக்கப்படவேண்டும். அதுவும் கூட்டத்திலோ சம்பந்தப்பட்டவர்கள் முள்ளாலே தெரிவித்து அது தொடர்பான விளக்கத்தினையும் தெளிவினையும் சுட்டிக்காட்டுபவர்கள் பெறச் செய்யவேண்டும். இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் தான் எம்மால் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டி எழுப்ப முடியும். தங்கள் குறைகளை மறைப்பதற்காகவும் இவ்வாறு சிலர் தெரிந்து கொண்டும் செயற்படுவதுண்டு. 'நித்திரை கொள்பவனை எழுப்பலாம். நித்திரை கொள்பவன் போல நடிப்பவனை ஒருபோதும் எழுப்பமுடியாது'.

(6ம் பக்கம் பார்க்க)

கே.ரி.



என் பழக்கமென்றான பின்பு
கெட்டவன் அழுகை தானே
கெடுவதை நிறுத்தவேண்டும்
பட்ட பின் தேறல் தானே
பட்டினத்தார் வாழ்வு என்று
தனக்குத் தானே சுயவிமர்சனம் செய்து கொண்ட கவிஞன்.

அண்ணன் தம்பி உறவுகளைக் கூட அலட்சியமாக பார்க்கின்றான்.

' அண்ணன் என்னடா
தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசை கொள்வதில்
அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே'

இந்தப் பாடலில் நான் முத்தம் கொடுத்து நேசிக்கும் ஒரு முத்திரை
'' மனித ஜாதியில் துயரம் யாவுமே
மனதினால் வந்த நோயடா''

# கண்ணதாசன் பாடல்கள்

(1990 களில் தமிழ் வானொலி ஒன்றில் ஒலிபரப்பப்பட்ட சினிமா பாடல்கள் பற்றிய கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கருத்துக்களின் தொகுப்பினை நமது உறவுகளில் ஒருவர் அகல்விளக்கு க்கு அனுப்பி வைத்துள்ளார். அதனை அப்படியே பிரசுரம் செய்கிறோம் - ஆசிரியபீடம்)

காதலைப் பாடுகின்றபோதும் காதல் தோல்வியை பாடுகின்றபோதும் கவியரசு கண்ணதாசன் தன் சொந்த அனுபவங்களை சுடச்சுட சொல்லியிருக்கின்றார்.- எந்தப் பொருள் கேட்டாலும் இல்லையென்று சொல்லாத சில கடைக்காரர்கள் போல எந்தப் பாடல்களுக்கும் தன் சொந்த அனுபவங்களை சொல்லெடுத்தே அவர் சுருதி சேர்த்தவர். இந்தப் பாட்டிலும் அவரது சொந்த அனுபவத்தின் சோகம் சொட்டுகின்றது.
காதல் தோல்வி கண்டோர் கழகம் என்று ஒன்றிருந்தால் அவர்களின் தினசரி கீதமாக இந்தப் பாடலை தெரிவு செய்யலாம். 'கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும். அவன் காதலித்து வேதனையில் வாடவேண்டும் -அவனை அழைத்து வந்து ஆசையில் மிதக்க விட்டு ஆடடா ஆடு என்று
ஆட வைத்துப் பார்த்திருப்பேன்
படுவான் துடித்திடுவான்
பட்டதே போதுமென்பான்
பாவியவன் பெண்குலத்தை
படைக்காமல் நிறுத்தி வைப்பான்

கூடாது பெண்குலத்தை படைக்காமல் நிறுத்தி வைக்கக் கூடாது
தமிழுக்கு இன்னொரு கண்ணதாசன் தேவை
அப்படியொரு கண்ணதாசனை பெற்றுத் தரும் தாய் ஒருத்திக்காக பெண்குலம் படைக்கப்படத் தான் வேண்டும்.

பொருளாதார உறவுகளினால் பின்னப்பட்ட சமூக அமைப்பின் சொந்தங்களும் பந்துங்களும் காசுகள் என்னும் கண்ணிகளால் பின்னப்படுகின்றன. இதில் பாசம் , அன்பு என்ற பழைய சொற்களெல்லாம் வீரம் குறைந்துவிட்டன.
சாரமிழந்துவிட்டன. அந்தப் போலி உறவுகளின் மீது வீசப்பட்ட விமர்சனம் தான் இங்கே பாட்டாக வருகின்றது.

தொட்ட பின் பாம்பு என்றும்
சுட்டபின் நெருப்பு என்றும்
பட்டபின் உணர்வதே

சொன்னது நீ தானா?
ஒரு நல்ல கவிஞனை எல்லா இயக்குநர்களும்
நேசிப்பார்கள். காரணம் அவர்களின் பாத்திரங்களுக்கு
அவன் தான் வர்ணமடிக்கின்றான்.
நானூறு பக்கங்களில் சொல்லப்பட்ட கதையை - அவன்
தான் நான்கு வரிகளில் சொல்லி முடிக்கின்றான். ஒரு
கதாசிரியன் சிந்திக்காமல் விட்ட மிச்சத்தையும் ஒரு
கவிஞன் சேர்த்து சிந்திவிடுகின்றான். ஒரு நல்ல
கதைக்கு தலைவாரி பூச்சூடி பொட்டும் வைத்து
அனுப்புகின்றான்.
இயக்குநர் ஸ்ரீதரின் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' அப்படி ஒரு
வீரியமான கதை. கணவனுக்கு புற்றுநோய் மரணம்
வழியில் வந்து கொண்டிருப்பதாகவே அவன்
நம்புகின்றான். தன் மனைவியை அழைக்கின்றான். என்
மரணத்திற்குப் பிறகு நீ மறுமணம் செய்து
கொள்ளவேண்டும் என்கிறான். அவள் ஒரு மரபு மங்கை
அழுகின்றாள். அந்தக் கண்ணீரும் விசும்பலுமே
பாடலாகின்றது.
ஒரு பெண்ணின் மொத்த மனநிலைகளை பத்துவரிகளில்
சொல்லிமுடித்தார் கண்ணதாசன்.

தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை
தெருவினில் விழலாமா?
தெருவினிலே வீழ்ந்தாலும்
ஊரார் கை படலாமா?
ஒரு கொடியில் ஒரு முறை தான்
மலரும் மலரல்லவா
ஒரு மனதில் ஒரு முறை தான்
வளரும் உறவல்லவா

சொன்னது நீ தானா சொல்.. சொல்.. என்னுயிரே
சம்மதம் தானா .. ஏன் ... ஏன்... என்னுயிரே
இன்னொரு கைகளிலே யார் யார் நானா
என்னை மறந்தாயா? ஏன்,? ஏன்? என்னுயிரே

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி நிலவும்


(5ம் பக்கம் பார்க்க)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

துவண்ட இதயத்தை தூக்கி நிறுத்தும் இந்தப் பாடல் மை ஊற்றி எழுதப்பட்ட எழுத்தல்ல. நெய்யூற்றி ஏற்றப்பட்ட தீபம்.

கண்ணதாசன் காதலிக்க தெரிந்த ஒரு கவிஞன் - காதலென்றால் காதலிகளை மட்டுமல்ல..
சுற்றுவது தெரியாமல் சுற்றிக்கொண்டிருக்கும் இந்தப் பூமியை, மயிர்க்கால்களை முத்தமிட்டுச் செல்லும் மந்தமாருதத்தை தேவதைகளின் வர்ணசாலைகளாக விளங்கும் அந்திவானத்தை -
சிலிர்த்துக் கொண்டோடும் சிற்றோடைகளை, மரங்களை , மனிதர்களை , மண்ணின் சௌந்தர்யங்களை கண்ணு றங்கும் வேளையிலும் காதலித்து திளைத்த கவிஞன்.
பெண்களைப் பற்றி பாடுவதென்றால் அவருக்கு கோடை வெயிலில் குற்றாலத்தில் குளிப்பது போல சுகம். ஓர் கையிலே பெண்ணும் - ஓர் கையிலே மதுவும் சேர்ந்திருக்கும் வேளையில் என் ஜீவன் பிரிந்தால் தான் நான் வாழ்ந்த வாழ்க்கை நலமாகும் இல்லையென்றால் ஏன் வாழ்ந்தாய் என இறைவன் எனைக் கேட்பான்

பாடலை எழுதிவிட்டு அவர் வீட்டுக்கு வந்துவிட்டார். வீட்டுக்கு வந்த பிறகு திடீரென்று ஒரு சிந்தனை உதித்தது.
ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையினிலே என்று இருந்தால் அது வெறும் வாக்குமூலம். இதில் கவிதை இல்லை. 'ஓடம் நதி வெளியே ஒருத்தி மட்டும் விதி வழியே' என்று இருந்தால் அது



கவிதை. மாற்றலாமா என்று சிந்தித்தபோது ஒலிப்பதிவு முடிந்துவிட்டது. மாற்றமுடியவில்லையே என்ற வருத்தம் கடைசிவரை அவர் மனதில் இருந்தது.
ஒலிப்பதிவுக்குப் பிறகும் தன் மொழிப் பதிவுகளை சிந்தையில் நிறுத்தி நின்றானே அவன் தான் கவிஞன்.
அரிய விடயங்களைக் கூட அலட்சியமாய் சொன்னவர்கள். அவரைப் போல் யாருமில்லை.

# பட்டறிவின் தொகுப்பு

என்றெல்லாம் காதல் வெறியில் கவிதைக்கு சூடேற்றிய கவிஞன்.
சின்னஞ் சிறு வயதில் பார்த்த ஒரு சிறுமி சேலை கட்டிய செந்தாமரையாகிவிட்டாள். அந்த அழகின் ஆச்சரியத்தை அவர் பாட்டாக்கி இருக்கின்றார்.

" பாவாடை தாவணியில்
பார்த்த உருவமா?"
கேட்கும் போதெல்லாம் நான் கிறங்கிப் போகின்ற வரிகள்

தத்தி தத்தி நடப்பதற்கே
சொல்லவேண்டுமா?
நீ முத்து முத்தாய் சிரிப்பதற்கே
பாடம் வேண்டுமா?
முத்தமிழே, முக்கனியே மோக வண்ணமே
இனி முப்பொழுதும் எப்பொழுதும்
நமது சொந்தமே

கருத்துப் பிழைகளால் பாடல்கள் பிழையாவது உண்டு.
எழுத்துப் பிழையால் கூட பாடல் பிழையாவது உண்டு.
' பார்த்துப் பார்த்து நின்றதிலே
பார்வையிழந்தேன்'' - என்ற பாடலில்
' காத்திருந்து காத்திருந்து
பொறுமையிழந்தேன்'' என்று தான் கவிஞர் எழுதியிருந்தார். ஆனால் 'காத்திருந்து காத்திருந்து பெருமையிழந்தேன்'' என்று பாடப்பட்டு விட்டது.

' தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்
தரத்தினில் குறைவதுண்டோ' என்ற பாடல் தமிழ்நாட்டில் சர்ச்சைக்குள்ளானது
தங்கத்திலே குறையிருந்தால் அது தரத்தினில் குறைந்து தானே போகும் என்று கூறப்பட்டது.
தங்கத்திலே ஒரு குறைவு இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ? என்று தான் அவர் எழுதியிருந்தார்.
எழுத்துப்பிழை கருத்துப்பிழை செய்துவிட்டது.
ஆனால் ஒலிப்பதிவுக்குப் பிறகு அடடா
இப்படியிருந்திருக்கலாமே என்று அவரை தூங்கவிடாமல் ஏங்கவைத்த பாடல் ஒன்று உண்டு.
'ஓடம் நதியினிலே
ஒருத்தி மட்டும் கரையினிலே'

பெண்ணை ஆடை கட்டிப் பார்த்தால் கலை
நிர்வாணமாய் பார்த்தால் கவிதை
பிணமாகப் பார்த்தால் தத்துவம்
இப்படி கனமான விடயங்களை சுகமாகச் சொல்ல அவருக்குத் தான் தெரியும். அந்த அலட்சியம் தான் அவர் பாடலின் வெற்றி. பாலும் பழமும் படத்திற்கு பாட்டெழுத புறப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.
வெளியே வந்தால் வக்கீல் நோட்டீஸ் வருகின்றது.
பையில் வக்கீல் நோட்டீசும் மனதில் கனத்தோடும் பாட்டெழுத போகின்றார்.அவரது நிலைமையும் பாத்திரத்தின் நிலைமையும் ஒன்றாக இருக்கின்றது.
அந்தப் பாத்திரத்துக்குள் ஒன்றித்து அவர் தன்னைப் பேசுகின்றார். சரம் சரமாய் வந்து வரிகள் விழுகின்றன.
இந்தப் பாடலில் பாத்திரத்தின் கண்ணீரும் இருக்கின்றது.
பாடியவரின் கண்ணீரும் இருக்கின்றது.

'இரவல் தந்தவன் கேட்கின்றான்
அது இல்லையென்றால் அவன் விடுவானா?
உறவைச் சொல்லி அழுவதினாலே
உயிரை மீண்டும் தருவானா?
வாழ்க்கை என்பது வியாபாரம்
அதில் ஜனனம் என்பது வரவாகும்
மரணம் என்பது செலவாகும்'

கவிஞர் கண்ணதாசன் என்னை வியப்பின் விளிம்பிற்கு தள்ளிய விடயமும் உண்டு. சத்தம் போடும் இரத்தம் கொண்ட சராசரி மனிதனுக்கு எத்தனை பலவீனங்கள் உண்டோ அத்தனை பலவீனங்களும் தனக்கு உண்டென அவரே அறிவிக்கின்றார். ஆனால் அந்த பலவீனங்களெல்லாம் அவரது கவித்துவத்தை வளர்த்து விட்டனவே தவிர வற்ற வைக்கவில்லை. அவரது அனுபவங்கள் அவரது கவிதா ஜோதிக்கு நெய் வார்த்ததே தவிர நீர் வார்க்கவில்லை.
தான் பட்ட காயங்களைக் கூட அவர் பாட்டாக்கினார்.
அதனால் அனுபவத்தின் கனம் இருந்தது. வாழ்ந்து பார்த்த வலிமை இருந்தது.
தனது கண்ணீரை, தனது சுகத்தை, தனது சோகத்தை, தனது ரணத்தை, தனது குணத்தை, தனது காமத்தை, தனது கோபத்தை - பொது உணர்ச்சிகளாக வரித்து வைத்து தமிழுக்கு புதையல் கொடுத்தான். அவரது காயங்களின் அனுபவங்களின் பட்டறிவின் தொகுப்புத் தான் பாடல்கள்.

# உலகின் முதன் மொழி தமிழ்!

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் என்று பலரும் பலவாறாகப் பேசவும் எழுதவும் கண்டும் கேட்டுள்ளோம்.

ஆனால் இது உண்மையான ஒரு கூற்றுத்தானா? என்றும் இன்றும் பலர் மனதிலே சந்தேகங்கள் இருப்பதைக் காண்கிறோம்.இன்றைய தமிழர் இதை வெறும் அடுக்கு மொழிவார்த்தை அலங்காரம் என்று கூடச் சிந்திக்கலாம் அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு இன்று தமிழினத்தின் நோக்கும் தொய்வு ஏற்பட்டு மங்கிய மயங்கிய மிகவும் தயங்கிய ஓர் இக்கட்டான கட்டத்திலே தள்ளப்பட்டு இருக்கிறது இதையிட்டு நான் மிகவும் வேதனை அடைகின்றேன்.

உலகில் முதன் முதல் தோன்றிய மொழி தமிழ் இது சத்தியம் நிச்சயம். அகில உலக மொழி ஆராய்ச்சி யாளர்களின் உறுதியான முடிவு இதுவே.இதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

குப்பையிலே இருந்தாலும் குண்டு மணி மங்குவதில்லை முன்னிலையே வாழ்ந்தாலும் ரோஜாவின் பெருமை குன்றுவதில்லை.அதே போலத் தான் நம் மொழியும் கடந்த சில நூற்றாண்டுகளாக மூன்றாம் சங்கம் அழிவுற்ற காலத்தின் பின் ஏற்பட்ட அந்நிய படையெடுப்புக்களாலும் அவர்களின் கலாச்சார சமயம் மற்றும் இன்னோரன்ன ஆதிக்கத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழர்களும் இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல நாடும் மொழியும் தமது இரு கண்கள் என்று உயர்ந்த இலட்சியத்தை விடுத்துக் கண்மூடித்தனமாக விளக்கை பழமென்று நினைத்து விட்டில் பூச்சிகளாய் அதில் விழுந்து மடிவது போல் தன்னிலை குன்றியுள்ளனர். இந்த இன்றைய நிலை மிகவும் வருந்தத் தக்கதே. இது யாவரும் அறிந்ததே.

பிற உயிர்கட்கு இல்லாத பகுத்தறிவு மொழியறிவு ஆகிய சிறந்த ஆற்றல்களை மனித இனம் பெற்றுள்ளன. எத்தனையோ நூற்றாண்டுகளாக நம் முன்னோர் விட்டுச் சென்ற செய்திகளை நம்மால் அறிய இயலாததாயின் அத்துறைகளில் ஒரு படி கூட முன்னேற முடியாமல் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்த நம் முன்னோர்களைப் போன்றே நாமும் வாழ்ந்திருப்போம். பின் மக்கள் அவர்களுக கென்று தனி ஒரு குடும்பம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். தனியாக இருந்த மக்கள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து சென்று தனக்கு வேண்டிய உணவுகளைக் காட்டில் வேட்டையாடி அதை உண்ண ஒரு தனிய கொட்டகை போட்டு வாழ்ந்து வந்தவர்களுக்கு என்று ஒரு தனி மொழி அமைத்துக் கொண்டனர். அதே போல் ஒவ்வொரு குழுவி னரும் ஒவ்வொரு மொழி அமைத்துக் கொண்டனர். இவ்வாறு அமைத்துக் கொண்ட மொழிகளில் முதன் மொழி தமிழாகும்.

மாலா மணாளன்- அமெரிக்கா

*ஊருக்கு.... (3ம் பக்கத் தொடர்ச்சி)*

கிராமத்தில் வாழ்ந்த காலத்தில் சனசமூக நிலையங்களில் எல்லோருமே அங்கத்தவர்கள். ஆனால் அங்கத்தவர் சந்தா ஒழுங்காக செலுத்தியிருக்கமாட்டோம். ஆனால் நிலையத்தில் ஏதாவது பிரச்னை என்றால் முன்னுக்கு நின்று கேள்வி கேட்பவர்கள் நாங்களாகத் தானிருக்கும். இந்த நிலை இங்கும் சில இடங்களில் இருப்பதாக அறிகின்றோம்.

ஒரு அமைப்பு இயங்கவேண்டுமானால் அல்லது ஒரு அங்கத்தவர் முனைப்பாக செயற்படவேண்டுமானால் அந்த அமைப்பிற்குரிய சந்தாவை செலுத்தி அதனுடைய கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளிலே பங்கெடுத்து செயற்படவேண்டும். பார்வையாளனாக இருப்பதை விட பங்காளனாக செயற்படுபவனே அங்கத்தவன். இவ்வாறு செயற்படுகின்ற போது சந்தேகங்கள், கேள்விகள் எழுந்தால் முறைப்படி அதனை சுட்டிக்காட்டி குறிப்பிட்ட அமைப்பினை ஆரோக்கியமாக செயற்பட செய்பவனே உண்மையான அங்கத்தவன் ஆகின்றான். நாளை தலைமையை அலங்கரிக்கும் தகைமையும் நிர்வாகத்தினை நகர்த்திச் செல்லும் சிறந்த நிர்வாகியும் இவனே. ஊழியனாக செயற்படுபவனே தலைவனாக உயர்த்தப்படுவான்.

புலம்பெயர் நாடுகளில் எமது அமைப்புக்கள் தனி நபர்களுக்கோ அல்லது குறிப்பிட்ட குழுக்களுக்கோ சொந்தமானதல்ல.இங்குள்ள எமது கைதடி உறவுகள் அனைவருக்கும் சொந்தமானதே என்ற மனப்பக்குவத்துடன் உறுப்பினர்கள் , நிர்வாகிகள் அனைவரும் செயற்பட வேண்டும். எங்களுக்கிடையே இருக்கக்கூடிய வேற்றுமைகள் களையப்படவேண்டும். ஒற்றுமையும் ஐக்கியமும் ஏற்பட அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். தவறுகள் திருத்தப்பட வேண்டும். நியாயப்படுத்தவேண்டியதல்ல.

தாயகத்தில் தோன்றியுள்ள இன்றைய பதற்றமான சூழல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக இவ்வாறான நிலைமை தான் தொடர்கதையாக இருக்கின்றது. எனவே இந்தச் சூழலில் ஊருக்காக உழைப்பதும் அதற்காக வாழ்வதும் ஒருபோதும் தோல்வியாகாது. நிச்சயம் ஒரு நாள் எமது உழைப்பும் நாங்கள் சிந்துகின்ற வியர்வையும் எமது தாயக உறவுகளுக்கு நிம்மதியன வாழ்வைப் பெற்றுத் தரும் என்று நம்புவோமாக.

இதற்காக புலம்பெயர்ந்த எமது உறவுகள் அனைவரும் ஒன்றுபட்டு உதவவேண்டும்.

## ரோஜா



பூக்களில் அழகிய பூ
ரோஜாவென நினைத்து
அதனை பறிக்கச் சென்றேன்
பறிக்கும் போது முள் குற்றியது
அப்போது தான் தெரிந்தது
அழகில் ஆபத்திருப்பது
அன்றிலிருந்து இன்று வரை
நான் ரோஜாவைப் பறிப்பதில்லை

குயில்

## உனக்காக



என் உயிரிலே
உனையமர்த்தி
என் இதயத்தின் சுவாசமாக
உனை நினைத்தேன்
ஆனால் நீயோ?
என் நினைவுகளை
விட்டெறிந்து - ஏன்
என்னை விட்டுப் போகின்றாய்
நூறாண்டு போனாலும்
மாறாது என் மனம்
என்றும் உனக்காக வாழும்

ப.றொஜின்

# ஜெனுஷாக் குட்டிக்கு முதலாவதுபிறந்தநாள்




பாரிஸில் வசிக்கும் திரு.திருமதி ஜெயசீலன் (திலகன்)- சசிகலா (கைதடி) தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெனுஷா தனது முதலாவது பிறந்தநாளை 27.07.2008 இல் பிரான்ஸ் BROCHANT இல் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்

இந் நாளில் ஜெனுஷா குட்டியை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துவோர்:

அம்மா,அப்பா,அம்மம்மா,அம்மப்பா,அப்பம்மா, பெரியப்பாமார்,பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

தகவல் - ஜெயசீலன்
BROCHANT

# திருமண வாழ்வில் வெள்ளி விழா



30.06.2008

## திரு. திருமதி தங்கத்துரை கனகமணி

கைதடி

இல்லறமே நல்லறமாய்
இல்வாழ்வில் கைகோர்த்து
வெள்ளிவிழா கண்டு நிற்கும்
அம்மாவும் அப்பாவும்
என்றென்றும் மகிழ்வுடன்
வாழ வாழ்த்துகின்றோம்

பிள்ளைகள்
கைதடி

# சுவடுகள் ------

தாயக மண்ணின் நினைவுகளுடன் அந்நிய மண்ணில் தொடரும் வாழ்வு சாதகமாக சில சமிக்ஞைகள் கானல் நீரைக் காட்டி எம் மக்களை ஏமாற்றும் அரசுகள், புகலிட வாழ்வில் தசாப்தங்கள் கடக்க எமது தலைமுறையின் வழியில் வரலாற்று நகர்வுகள் தொடர மனப்பாரம் அழுத்த வாழ்க்கை கழிகின்றது.

நவீன தொலைதொடர்பு சாதனங்களின் அபரிமித வளர்ச்சியில் கேட்டலிலும் பார்த்தலிலும் தொலைபேசலிலும் காலங்கள் கரையும் வேளையில் வாசிப்பதற்கான நேரம் குறைகின்றது.

# குணாவின் குறிப்புக்கள்

இந்நிலையில் அகல் விளக்கு முதல் இதழ் வெளிவந்து எம்மவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றது.

இப்பக்கத்தின் வாயிலாக நாம் நடந்து வந்த காலங்களிலும் நடந்து வந்த பாதையிலும் என் மனதில் பதிந்த நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான சிறிய முயற்சி.

நான் பத்தாவது படித்துக் கொண்டிருந்தபோது எமது சனசமூக நிலையத்தில் தினசரிப் பத்திரிகைகளுடன் 'அன்பு' என்னும் கையெழுத்துப் பிரதி இருக்கக் கண்டு வாசித்தேன். வாசித்ததுடன் அதற்கான சில ஆக்கங்களை கட்டுரை - கவிதை என்பன எழுதி அதன் ஆசிரியரிடம் கொடுத்திருந்தேன். நான் நினைக்கின்றேன் அப்பிரதியின் முதல் வாசகனும் ஆக்கங்கள் அனுப்பியவரும் நானாகத் தானிருந்திருப்பேன் என்று. அதன் பின் கலைமதி கையெழுத்துப் பிரதியொன்றை வெளியிட்டதுடன் கலைமானி (B/A) பட்டப் படிப்பு படித்த காலத்தில் மாணவர் மன்றத்தின் பத்திராதிபராக இருந்து தமிழ்த்தென்றல் என்னும் சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகவும் பின்நாட்களில் ஈரோஸ் அமைப்பின் பொதுமை பத்திரிகைக்கும் ஆசிரியராகவும் செயற்பட்டிருக்கின்றேன். எதற்காக இவ் விடயத்தை குறிப்பிடுகின்றேன் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கான காரணம் எனது 15 வயதில் ஆக்கங்கள் எழுத என்னை ஊக்குவித்த 'அன்பு' கையெழுத்துப் பிரதியின் ஆசிரியரும் அகல் விளக்கு பத்திரிகையின் பொறுப்பாசிரியரும் ஒருவரே என்பதனால்.

இப்பக்கத்தில் முதல் பகிர்வாக எமது கிராமங்களின் வளர்ச்சியில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு தொடர்பாக சில விடயங்களை சுருக்கமாக குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். எமது கிராமத்தில் பல சனசமூக நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. தினசரிப்பத்திரிகைகள் உட்பட சில வார மாத சஞ்சிகைகளையும் வாசிப்பு ஆர்வமிக்கவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதால் வாசிகசாலை என்றும் அழைக்கப்படுகின்றது.



நிர்வாகக் குழுவொன்று வருடமொருமுறை தெரிவு செய்யப்பட்டு கிராம மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதுடன் ஆண்டு விழாக்கள், சிறப்பு விழாக்கள் மூலம் கலை, கலாச்சார , விளையாட்டு ஆர்வம் உள்ள இளைஞர்களை போட்டிகளில் ஆர்வமுடன் பங்கு கொள்ளச் செய்து அவர்களது திறமைகளை வெளிக் கொணரும் முயற்சியில் பெரும் பங்களிப்பர்.


எமது கிராமத்தைப் பொறுத்த அளவில் மேற்கு, கிழக்கு, வடக்கு,தெற்கு , மத்தி என திசை வாரியாகப் பிரிக்கப்பட்டு அப்பகுதி மக்களிடையே வளர்ச்சித் திட்டங்களிலும் பெரும் பங்களிப்பு நல்குவதுடன் இன்று பலர் புலம் பெயர்ந்து நாடுகளில் வாழ்வதால் இந்நாடுகளிலும் செயற்பட்டு அவல நிலையில் வாழும் எம்மவர்களுக்கான பங்களிப்புக்களை இச்சனசமூக நிலையங்கள் ஊடாக செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சனசமூக நிலையம் என்னும் நிர்வாகக் கட்டமைப்பு தாயகத்திலுள்ள உறவுகளுக்கும் புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகளுக்குமிடையேயான உறவுப் பாலமாக அமைந்து அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொள்வதற்கு இலகுவான வழியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று சொன்னால் மிகையாகாது


பகிர்தல் தொடரும்

குணா- கலைதாஸ்

# குயிலின் கை வண்ணம் காணீர்!







இன்டர்நெட் காலத்திலும் இந்தியாவை காந்தி தேசம் என அழைக்கச் செய்த மகாத்மா!



உங்கள் எண்ணத்தில் உதிக்கின்ற ஓவியங்களை வரைந்து எமக்கு அனுப்பி வைக்கவும். தங்கள் கைவண்ணங்களை அகல்விளக்கு பிரசுரிக்க தயாராக இருக்கின்றது

# கலைத்துறையில் கைதடி குணம்

ஆரம்ப பாடசாலை நாட்களில் இருந்தே தனது கலைத்து வத்தை வெளிக்காட்டி வந்தவர் கலைஞர் குணம். நடிப்பு, பாட்டு, பேச்சு , அறிவிப்பு என கலைத்துறையில் கைதடியில் தனித்துவமிக்க ஒரு கலைஞராக தன்னை அடையாளம் காட்டினார். இன்று புலம்பெயர்நாடுகளிலுள்ள தமிழர்கள் அனைவரும் அறிந்து கொண்ட ஒரு மாபெரும் கலைஞராக டென்மார்க்கில் திகழ்ந்து கொண்டிருக்கும் குணலிங்கத்தின் கலைப்பணி மேலும் வளர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அவரைப் பற்றி வரைவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் அவரது பள்ளித் தோழன். மிகவும் நெருங்கிய நண்பன். பள்ளி நாட்களில் பாடசாலைக்கு அவர் வராதுவிட்டாலும் அல்லது நான் செல்லாதுவிட்டாலும் நாங்கள் படும் பாட்டை எழுத்தில் வடிக்கமுடியாது. அவ்வளவுக்கு நட்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தோம். பாடசாலை கல்வி முடிந்ததும் இருவரும் வெவ்வேறு திசைகளில் பயணித்தமையினால் தொடர்ந்து சந்திக்கவோ பழகவோ முடியவில்லை. இருந்தாலும் அவர் கைதடி மின்னொளி நாடகமன்ற நாடகங்களில் நடிக்கும் பொழுதெல்லாம் ஓடோடிச் சென்று பார்த்து மகிழ்வேன்.'

பள்ளி நாட்களில் கைதடி கலைவாணி வித்தியாசாலையில் கைவிடப்பட்டிருந்த கட்டிடம் ஒன்று இருந்தது. அதற்குள் பழைய தளபாடங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மாணவர்களாகிய [redacted] நாங்கள் லீவு நேரத்தில் அந்தக்கட்டிடத்துக்குள் சென்று தளபாடங்களை அரசருக் குரிய ஆசனம் போல் அடுக்கி வைத்து அதில் நின்று கொண்டு வீரவசனங்களைப் பேசுவோம். அந்த கட்டிடத்துக்கு 'காட்டு ராமன் கோட்டை' என்று பெயரிட்டோம். குணலிங்கம் அங்கு வரும்பொழுதெல்லாம் அன்றைய சினிமா மற்றும் நாடகங்களில் வரும் வசனங்களை பேசி நடித்துக் காண்பிப்பார். ஒரு தடவை 'சிவந்த மண்' படத்தில் சிவாஜி கணேசன் பேசி நடித்த ஒரு காட்சியை தத்ரூபமாக பேசி நடித்துக் காண்பித்து எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்துவிட்டார்.

இவ்வாறு மிகச் சிறுவயதிலேயே கலைத்தேவியால் ஆசீர்வதிக்கப்பட்டவர் தான் குணலிங்கம். நாங்கள் அன்று கட்டிய 'காட்டு ராமன் கோட்டை'யில் களமாடியவர்களில் நண்பர்கள் குணலிங்கமும் வி.பாஸ்கரும் (சுவிஸ்) இன்று கலைத்துறையில் தன்னிகரற்ற கலைஞர்களாய் திகழ்கின்றார்கள் என்றால் அது மிகையல்ல.

தாயகத்தில் மின்னொளி நாடக சபாவில் அவர் பல நாடகங்களில் நடித்து தன் திறமையை வெளிப்படுத்தினார். பல மேடைகளில் நாடகம் மட்டுமல்ல பாடல்களையும் பாடி பாராட்டுக்களையும் வெற்றிகளையும் பெற்ற குணலிங்கம் 1986 ஆம் ஆண்டு கைதடியிலிருந்து புலம்பெயர்ந்து டென்மார்க் நாட்டுக்கு வந்தார்.

டென்மார்க்கில் புத்தூர் நவரசக் கலைஞன் ரி.யோகராஜாவுடன் இணைந்து நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். 'வள்ளி திருமணம்' என்ற புராண இசை நாடகத்தில் வேடன் பாத்திரத்தை ஏற்று தன் நடிப்பினால் ரசிகர்கள் அனை வரையும் தன் வசப்படுத்தினார். தொடர்ந்து யூலன் இசை குழு, தமிழீழம் இசைக்குழு, ராஜ் இசைக்குழு, சப்தஸ்வரா இசைக்குழு, ராகமாளிகா இசைக்குழு, சிம்பொனிஇசைக்குழு, விடியல் இசைக்குழு போன்ற பல இசைக்குழுக்களுடன் இணைந்து பல பாடல்களை பாடி தனது குரல் வளத்தினால் டென்மார்க்கிலும் புகழ்க் கொடி கட்டிப் பறந்தவர் நமது கைதடி பெற்ற மைந்தன் குணலிங்கம்.

டென்மார்க் கலை பண்பாட்டுக் கழகம் 1993 ஆம் ஆண்டு நடத்திய முத்தமிழ் விழாவில் சிறந்த பாடகருக்காக விருதைப் பெற்றதுடன் 1995 இல் டென்மார்க் தமிழ்ச் சங்கம் நடத்திய சிறந்த பாடகருக்கான போட்டியில் கலந்து கொண்டு முதலாவது இடத்திற்கான விருதினையும் பெற்றார்.

லண்டன் ஐபிசி வானொலி 2003 ஆம் ஆண்டு ஐரோப்பா தழுவிய ரீதியில் நடத்திய இன்னிசைக் குரல் போட்டியில் இரண்டாவது இடத்தையும் இவர் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை டென்மார்க் கே.எஸ்.துரை அவர்களின் தயாரிப்பில் உருவான 'பூக்கள்' என்ற திரைப்படத்தில் 'தாயே தாயே மண்ணே' என்ற பாடலையும் பாடி திரைப்படத்துறையிலும் காலடி பதித்துள்ளார். தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சிகளில் இவரது பாடல்கள் ஒலி, ஒளி பரப்பப்பட்டு வருவதுடன் ஐ.ஆ.இ.வானொலி பிரதி ஞாயிறு தோறும் நடத்தும் 'முற்றத்து மல்லிகை' நிகழ்ச்சியில் இவரது குரலை அடிக்கடி கேட்க முடிகின்றது.

கலைத்துறையில் கால் பதித்துள்ள நண்பன் குணலிங்கத்தின் கலைப்பயணம் தங்குதடையின்றி இனிதே தொடர வாழ்த்துகின்றோம்.

**கே.ரி.**

## கனடா கடிதம்

# தாயக உறவுகளுக்கு உதவுவோம்

(நா. கந்தையா - தலைவர் கனடா கைதடி மக்கள் நலன்புரிச்சங்கம்)

கைதடி பிரதேசத்தின் குடும்ப தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு உதவுதல், கல்வியை தொடரமுடியாத மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தல், வதிவிட வசதியற்றோருக்கு வதிவிட வசதி அமைத்தல், வருமானமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய உயரிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கனடாவில் கைதடி மக்கள் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நாம் வானுயரப் பறந்தாலும் எமது தாயக எண்ணங்கள் எம்மை வாட்டி வதைப்பது கண்கூடு. தாயக மக்களுக்கு நாங்கள் உதவி செய்யாவிடின் நாம் மக்கள் மாண்பினை இழந்தவராவோம். எமது உறவுகள் துயரப்படும்போது அவர்களுக்கு உதவிடும் நோக்கோடு நல்லிதயம் கொண்டோர் நண்பர்கள் உறவினர்களின் துணை கொண்டு தாழம்பூ 2006 ஆனந்தமாலை என்னும் நிகழ்வினை நடத்தி அதனூடாக கிடைத்த நிதியினை கைதடி மக்கள் நட்புறவுக் கழகத்துக்கு அனுப்பி வைத்து கழகம் ஊடாக எமது வேலைத் திட்டத்தினை கைதடியில் ஆரம்பித்துள்ளோம்.

கனடாவிலிருந்து அனுப்பப்பட்ட நிதியிலிருந்து முதியோர் நலன் பேணும் திட்டத்தை நட்புறவு கழகம் ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே அங்கு நடைமுறையிலுள்ள கல்வி மேம்பாட்டுத் திட்டத்துடன் இத்திட்டமும் இணைக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் இவ்வருடமும் தாழம்பூ 2008 ஆனந்தமாலை நிகழ்வினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். 2008 யூன் 7 அன்று இந்த நிகழ்வு நடை பெறவுள்ளது. நாடகம், பாடல்கள், நடனங்கள், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் என பல கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டும் 'நாட்டு நடப்பு' என்ற தலைப்பில் நாடகமும் அரங்கேற உள்ளது. இந்நிகழ்வில் வழமை போன்று கனடாவில் வாழும் சமூகப் பிரமுகர்கள் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இதில் கிடைக்கப் பெறும் நிதி கைதடி மக்களின் மேம்பாட்டு பணிகளுக்காய் அனுப்பி வைக்கப்படும்.

கனடா கைதடி மக்கள் நலன்புரிச் சங்கத்தின் வெளியீடான தாழம்பூ 2008 மலர்வெளியீடு நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் கைதடி வாழ் மக்களின் சமூக கலை பண்பாட்டு

(9ம் பக்கம் பார்க்க)

# கல்வி மேம்பாட்டு விழா

பிரான்ஸ் கைதடி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகம் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அண்மையில் கல்விமேம்பாட்டு விழாவொன்றினை நடத்தியது.
கழகத்தின் தலைவர் திரு.ப செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த விழா கைதடி மேற்கு நேவையூர் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மக்கள் முகாமையாளர் க. சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினராக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக கைதடி சனசமூக நிலையங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவர்களுக்காக உதவித் தொகையும் வழங்கப்பட்டது.
விழாவின் இறுதி நிகழ்வாக வங்கியாளர் க.சிறீதரன் வங்கி முகாமையாளராக பதவியுயர் பெற்றதையொட்டி கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெற்றது.

## கௌரவிக்கப்பட்டோர் விபரம்

செல்லத்துரை துஸ்யந்தி
வடிவேலு துமிலன்
சின்னத்துரை ஜீவிதா
சண்முகராஜா விஜயராஜ்
செல்லத்துரை தமயந்தி
வைரமுத்து விஜிதரன்
பஞ்சலிங்கம் அருண்சயா
இராசேந்திரம் சுதனா
மகேந்திரம் துசாரினி
சிவதுரை தருசாளினி
தனபாலசிங்கம் தேவகுமார்
சந்திரமோகன் லதுசனா

# பிரான்ஸ் உதவி பெறும் மாணவர்கள்

கண்ணதாசன் கல்சியா
சிவதுரை பஜினா
ஜெகதீஸ்வரன் இந்துஜா
குணரட்ணம் டயூரி
கோடீஸ்வரன் சாகிந்தா
பாஸ்கரன் தனுஸ்டிகா
பாலன் பராசக்தி
பாலன் பராலிங்கம்
பிறேமதாசா பகீரதன்
ஆனந்தன் சஜீபா
அல்பிறட் ஜசிந்தன்
மாசிலாமணி அகிலா
ஞானசேகரம் அனிஸ்ரா
பாஸ்கரன் சிவதாசன்
நிமலேந்திரன் காயத்ரி
இரத்தினசிங்கம் லகிர்தா
நாகராஜ் ஜனனி
செல்வராஜா நிதர்சினி
புஸ்பராஜா கஸ்தூரி
முருகையா சிவானா
இராமலிங்கம் துர்க்கா
அருமைநாதன் அஜிந்தா
செல்வன் சுதர்சன்
சண்முகலிங்கம் கற்சாயினி
தம்பிராசா றெஜிந்தன்
யோகலிங்கம் யதுசா
சிவராஜா கஜந்தன்
மகாலிங்கம் சாருஜா
ஜீவராசா பிரமீனா
காசிப்பிள்ளை இதயராஜ்

தாயக .... (8ம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாடுகளை வளர்த்துப் பிரசுரிக்கும் 'அகல்விளக்கு' காலாண்டு இதழுக்கு கனடா வாழ் கைதடி உறவுகளின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
எண்ணிக்கையிலேயே சிறு தொகையினராக இருந்தாலும் சாதனைகள் படைக்கின்ற பிரான்ஸ் கைதடி அபிவிருத்திக் கழகத்தினை பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆவணப்படுத்தல் மூலம் சரித்திரங்கள் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. இதற்கு 'கிராமத்துக் குரல்' ஒரு எடுத்துக் காட்டு. அந்த வகையில் அகல் விளக்கு பரந்துபட்டு உலகெங்கும் வாழும் கைதடி மக்களின் மேம்பாட்டையும் ஐக்கியத்தையும் வெளிக்கொணரும் என்ற அசையாக நம்பிக்கை எமக்கிருக்கின்றது

## லண்டன் கைதடி ஒன்றியம் புதிய நிர்வாகம் தெரிவு

2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட லண்டன் கைதடி ஒன்றியம் 110 உறுப்பினர்களுடன் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட போது செ.பாஸ்கரன் தலைவராகவும் மா. ரஞ்சநாதன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வழி நடத்தலில் 2008 வரையும் இயங்கியது.தற்பொழுது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிர்வாகத்தின் விபரம் வருமாறு:- தலைவர் இ.ராஜ்குமார், உபதலைவர் க. ஜெயப்பிரகாஷ், செயலாளர் நா.கனோத், உப செயலாளர்ச. தயானி, பொருளாளர் சி. புரட்சிதாசன், நிர்வாக உறுப்பினர்கள் க. மோகனச்சந்திரன், உ. ஜெசிந்தன், கி.பிரபு, சி.தங்கேஸ், சி.பொன்னுத்துரை, வே.பூபாலசிங்கம், வா. வீரகுமார்.
2008 பெப்ரவரி 9 ஆம் திகதி லண்டன் ஒன்றியத்தின் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செ. பாஸ்கரன் மற்றும் கைதடியிலிருந்து வருகை தந்த திருமதி மாதவன் மீனாட்சி ஆகியோர் மங்கள விளக்கேற்றி பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்தனர். பொங்கல் விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக செல்வி. பூபாலசிங்கம் தர்சிகா பொங்கலின் சிறப்புப் பற்றி கவிதை வழங்க செல்வி ரவி சொனிதாவின நடனமும் இடம் பெற்றது. எதிர்வரும் ஆடி, ஆவணி மாதங்களில் கலை நிகழ்வுகளும் விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.
புலம் பெயர் நாடுகளில் இயங்கும் கைதடி மேம்பாட்டு ஒன்றியம் சுவிஸ், கைதடி அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ், கைதடி ஒன்றியம் நோர்வே, கைதடி மக்கள் நலன்புரிச் சங்கம் - கனடா, ஆகிய எமது சகோதர அமைப்புக்களுடன் இணைந்து கைதடி மேம்பாட்டு பணிகளுக்கு லண்டன் ஒன்றியம் உதவும் என்று செயலாளர் நா.கனோஜ் தெரிவித்தார்.

# சிரி....
# சிரி...
# சிரி...



அண்மையில் தாயகம் சென்று திரும்பிய ஒருவரை சந்தித்தபோது:

நான்:- அண்ணை ஊருக்குப் போய் வந்தியள். ஊர் எப்படியிருக்கு?
அவர்:- ஊரிலை எல்லாம் சரியாயிருக்குது. ஆனா தமிழ் எழுத்தெல்லாம் மாத்திப் போட்டாங்கள்.
நான்:- கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோவன்
அவர்:- ஒரு எழுத்து இரண்டு எழுத்தாப் போச்சு.
அதாவது ல என்ற எழுத்து லை ஆக எழுதிக்கிடக்கு.
நான்:-........

## சிரி...சிரி..சிரி..

தாயகத்திலிருந்து ஐரோப்பாவிற்கு புதிதாக வந்த இரு இளைஞர்கள் ..........

ஒருவர்:- எப்படி மச்சான் வேலை செய்யிறாய் தானே?
மற்றவர்:- (சலிப்புடன்) ஊரிலை படிச்ச படிப்புக்கு இங்கையென்ன கோப்பை கழுவுற வேலை தானே கிடைச்சிருக்கு.
ஒருவர்:- அப்படியெல்லாம் சொல்லக்கூடாது.. என்னைப் பொறுத்தவரையிலை நான் பள்ளிக்கூடம் சென்று படிச்சதாலை பயனை அனுபவிக்கிறன்.
மற்றவர்:- ஆச்சரியத்துடன்...எப்படி,?
ஒருவர்:- பள்ளிக்கூடத்திலை பாடங்களுடன் வாரத்தில் ஒரு தடவையேனும் வகுப்பறையை கூட்டி துப்பரவு செய்யும் பணியையும் செய்யுமாறு சொன்னவை. அதனாலை இங்கும் வந்து துப்பரவாக்கும் வேலை செய்ய லேசாப் போச்சு...



## பொய்யா மொழிகள்

ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பது தான் பெருமை.

சிலர் இருக்கும்போதே இறந்தவர்களாக இருக்கின்றார்கள். சிலர் இறந்த பிறகும் இருப்பவர்களாக இருக்கின்றார்கள்.

தொடர்ந்து வெற்றி மட்டும் போதாது. மனிதனுக்கு தோல்வியும் தேவை. தொடர்ந்து வெற்றியே கிடைத்தால் அது அதிர்ஷ்டம் என்று கொச்சைப்படுத்தப்படும். தோல்வியும் வந்தால் தான் பெற்ற வெற்றி உழைப்பினால் வந்த ஊதியம் என்ற உண்மை விளங்கும்.

## அறியாமை

ஐந்தறிவுடைய
பசுமாட்டின் கழிவை கூட
கடவுளாக வணங்கும் நீ
ஆறறிவுடைய
உன் சக மனிதனை
தீண்டத்தகாதவன் என்று
ஒதுக்கி வைக்கும் - உன்
அறியாமையை
என்ன வென்பேன்
கணனி யுகத்திலும் - உன்
நிலை மாறவில்லையே !

— மா. ஜெயந்தன்.

## பொறுமை

பொறுமை வைப்பகத்தில்
வறுத்தெடுத்த
உணர்வுத் தங்கம்
விடுதலை ஆபரணங்கள்
விதவிதமாய்
ஆக்கிப் போடும்
அங்க மறுப்பவர்களுக்கு
ஏற்பு வலியாக்கும்
ஏற்றுக் கொள்பவரை
பொற்புப் புகழ் காக்கும்.

— வி. பாஸ்கர்.

## கண்ணீர் அஞ்சலிகள்

ப[redacted]. மார்க்கண்டு

அண்மையில் தாயகம் கைதடியில் காலமான ப[redacted]. மார்க்கண்டு (அகல் விளக்கு ஆசிரியர் குழுவை சேர்ந்த மா. ஜெயந்தன் அவர்களின் தந்தை) அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுத்து கொள்வதுடன், அன்னாரை பிரிந்து சோகத்தில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

[redacted]வு. கணபதி

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவு கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர் திரு க. சிறீதரன் அவர்களின் தந்தையார் [redacted]வை. கணபதி அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுத்து கொள்வதுடன், அன்னாரை பிரிந்து சோகத்தில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறோம்.

— கைதடி அபிவிருத்தி கழகம் பிரான்ஸ்

## நின்றுவிடாதே

இதயமே!
நின்றுவிடாதே
ஈரமாகிப் போன என் விழிகளுக்குள்
சோகங்கள் நிறைய
உறக்கமற்ற இரவுகள்
உனக்கு மட்டும்
புரிந்து கொள்வதில்
நியாயமில்லை
ஏன் தெரியுமா
நீ தூரத்து நிலவாக - என்
இதய வானிலே பிரகாசித்தவள்
மின்னிடும் நட்சத்திரங்கள்
புன்னகைக்க – நீ
புரியாமல் புதிர் போட்டவள்.
கற்றுத் தந்த கனவுகளைக்
காதலியானவள்.
தொட்டு பேச நினைத்த போது
விட்டு விலகி ஓடியவள்
இதயம் மட்டும் நின்றுவிட்டால்
உன் நினைப்பும் அழிந்து விடும்
இதயமே! - நீ
நின்று விடாதே
என்னவள் இங்கேதான்
தூங்குகிறாள்.

– ஆனந்தன்.



பொட்டு வைத்து விட்டு - நீ
தொட்டு சென்ற இடமெல்லாம்
ரசிக்க சொல்லுதடி ஓவியமாய்

என் தோட்ட பூக்களெல்லாம்
ஏன் இவ்விரு பட்டாம் பூச்சிகளும்
தேனெடுக்க வருவதேயில்லை - என்று
ஏங்குகின்றன –
நீ கண் சிமிட்டும் அழகை பார்த்து

நீ தலை வாரும் போது
சீப்பில் சிக்கிக் கொள்வது
உனக்கு .....
எனக்கு உயிர்
உனக்கு அது முடி
எனக்கு அதுவே முடிவோ!

– சி. தர்ஷன்.

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பிரான்ஸ் Choisy Le Roi இல் வசிக்கும் உதயன் (நாயன்மார்கட்டு) - விமலா (கைதடி) தம்பதிகளின் செல்வப் புதல்வி **நளினிதா** 17.06.2008 அன்று தனது ஐந்தாவது பிறந்த தினத்தை தனதில்லத்தில் கொண்டாடுகின்றார்.
நளினிதாவை அம்மா, அப்பா, சகோதரிகள் , உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்துகின்றனர்


டென்மார்க் றனஸ் நகரில் வசிக்ம் திரு.திருமதி தேவன் (மட்டுவில்)- கஸ்தூரி (கைதடி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் **பிரணவன** தனது முதலாவது பிறந்த நாளை 31.05.2008 இல் கொணடாடினார். இவரை அம்மா, அப்பா மற்றும் உறவுகள் வாழ்த்து கின்றனர்.




பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் புறநகர்ப்பகுதியான லாக்கூர்நோவ் நகரில் வசிக்கும் திரு.திருமதி ஜெயந்திரன் - அருந்தவமணி (அரசி- கைதடி) தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் ஜெனித் (ஜனா) நாலாவது பிறந்த தினத்தை 22.05.2008 அன்று தனதில்லத்தில் வெகு குதுாகலமாக கொண்டாடினார்.
இவரை அம்மா- அப்பா உட்பட அனைத்து உறவுகளும் வாழ்த்துகின்றார்கள்.

அமெரிக்கா நியூஜெர்சி நகரில் வசிக்கும் திரு.திருமதி இராசலிங்கம் (கைதடி) - மாலதி (மாலா) தம்பதிகளின் தவப்புதல்வன் **கிஷாரன்** தனது முதலாவது பிறந்தநாளை 21.05.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார்.
இவரை அம்மா, அப்பாவுடன் அனைத்து உறவுகளும் வாழ்த்துகின்றார்கள்.

<u>இந்த மழலைகள் அனைவர்க்கும் அகல்விளக்கின் சிறப்பு பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்</u>



பிறந்தநாள் வாழ்த்துப் பகுதியில் தங்கள் குழந்தைகளின் வாழ்த்துக்கள் இடம்பெற வேண்டுமா? உங்கள் குழந்தையின் பெயர் விபரம் பிறந்த திகதி மற்றும் புகைப்படம் என்பவற்றை எமக்கு அனுப்பி வைக்கவும்
இந்தப் பகுதியில் கட்டணமின்றி அகல்விளக்கின் வாழ்த்துப் பகுதியாக பிரசுரிக்கப்படும்.

பாரிஸ் BROCHANT இல் வசிக்கும் திரு.திருமதி ஜெயசீலன் - சசிகலா (கைதடி) தம்பதிகளின் செல்வப் புதல்வி **ஜெனுஷா** தனது முதலாவது பிறந்த நாளை 27.07.2008 அன்று தனதில்லத்தில் கொண்டாடவுள்ளார்.


இவரை அம்மா, அப்பாவுடன் அனைத்து உறவுகளும் வாழ்த்துகின்றார்கள்.



# ATC TELECOM



*Carte Telephonique
*Fax
*Photo copie
*Internet



25 Rue de Patay,
75013 Paris
Tel: 01/ 44 23 81 86
Fax: 01/44 23 81 86